# பாட்டாளி சிந்தனை

Volume 33 No 4

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

December 2022

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5





இந்த சகாப்தத்தில் உண்மையை விமர்சன ரீதியிலும் மிக நுணுக்கமாகவும் அறியவேண்டிய மிகப்பெரிய தேவையை பாட்டாளி வர்க்கம் கொண்டிருக்கிறது. அவ்வாறு உண்மையை நீங்கள் அறிய விரும்பினால், பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தில் உங்களை ஈடுபடுத்திக்கொண்டு, எதை இன்று அறிவுபூர்வமான உண்மை என்று நினைக்கிறீர்களோ அதை உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் கடைபிடிப்பதற்காக உறுதியான தீர்மானகரமான, சமரசமில்லாத போராட்டத்தை உறுதியுடன் நடத்தவேண்டும். இந்தப் போராட்டங்களின் மூலம் உணரப்பட்ட உண்மையின் அடிப்படையில் நீங்கள் உங்களை இடைவிடாமல் தொடர்ந்து மாற்றிக்கொள்ள வேண்டும். இதுவே உண்மையை அறிவதற்கான ஒரே வழியாகும். .... நீங்கள் உண்மையின் மீது பற்று கொண்டவரானால் ஒரு சாதாரண மனிதனிடமிருந்தும் அதைத் தெரிந்து கொள்ள உங்கள் கண்களையும் மனதையும் திறந்தே வையுங்கள்.

**– சிப்தாஸ் கோஷ்**

# தோழர் சிப்தாஸ் கோஷ் எடுத்துரைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் நவம்பர் புரட்சியின் படிப்பினைகள்

*பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் பிறந்த நூற்றாண்டையொட்டி அவரது சில போதனைகள்*

... சமுதாயத்தை மாற்ற, சரித்திரப்பூர்வமாகக் கண்டறியப்பட்ட அறிவியல் செயல்முறைப் போக்கு ஒன்று (Scientific process) இருக்கின்றதென நான் முன்பே கூறியிருந்தேன். முதன்முதலாக மார்க்சிசமே அப்பாதையை மனிதனுக்குக் காட்டியது. இன்றைய சகாப்தம், லெனின் வகுத்துக் கொடுத்துள்ளபடி, 'சாகும் தருவாயிலிருக்கும் ஏகாதிபத்திய– முதலாளித்துவ அமைப்பும் சர்வதேச பாட்டாளி வர்க்கப் புரட்சியும்' என்ற சகாப்தமாகும். இன்று, மார்க்சியவாதிகள் மார்க்சிசத்துடன் லெனினிசம் எனும் வார்த்தையைச் சேர்த்து, இச்சகாப்தத்தில் ஓர் சமூகப் புரட்சியை நிறைவேற்ற வேண்டுமாயின் அதற்கு மார்க்சிசம் –லெனினிசம்தான் ஒரே ஆயுதம் என வலியுறுத்துகின்றனர். அத்தகைய ஆயுதம், பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் வெடிகுண்டுகளையும் குறிப்பிடுவதாகாது, மாறாக அது மாபெரும் சக்தியைக் கொண்ட ஆயுதமாகும். ஒருமுறை கைவரப் பெற்றுவிட்டால் அவ்வாயுதம், சுரண்டப்படும் உழைக்கும் மக்களிடையே மாபெரும் சக்தியை உருவாக்கி, திட்டமிடும் ஆற்றலையும், அமைப்பை ஏற்படுத்தும் திறமையையும் உருவாக்கி, உயர்ந்த மட்டத்திலான உணர்வினையும் அவர்களிடம் ஏற்படுத்தும். இவையனைத்தும் அவர்களின் நீண்ட நெடிய யுத்தத்தில் ஓர் வெல்லற்கரிய சக்தியாக உடனிருக்கும். பீரங்கிகள் மற்றும் துப்பாக்கிகளின் ஆயுத பலத்தால் சுரண்டப்படும் மக்களின் போராட்டங்களைத் தடுத்து நிறுத்த விரும்புவோரால் மக்கள் சக்திக்கு ஊற்றுக்கண்ணாயிருக்கும் அம்மாபெரும் சக்தி என்ன என்ற புதிரை, அந்த மார்க்சிச–லெனினிச சக்தியை, நிச்சயமாகப் புரிந்துகொள்ள முடியாது.

மார்க்சிசம்–லெனினிசம், பிரச்சினை எங்கே இருக்கிறது என்பதையும் அதன் மூலகாரணத்தை, மாறிவரும் சமுதாயத்தின் மாற்றத்தை விவரிக்கும் விதிகள் எவை என்பதை தெரிந்து, புரிந்துகொள்ள உதவுகிறது. இயற்கையின் பல்வேறு செயல்பாடுகளில் பொதிந்திருக்கும் விதிகளைச் சரியாகக் கண்டறிந்து அதனைக் கிரகித்திருப்பதால் விஞ்ஞானிகளால் இயற்கையின் சக்தியைப் பயன்படுத்த முடிகிறது. அதைப்போல, சமூக விதியைப் புரிந்து, கிரகித்துக்கொண்டால் மட்டுமே மனிதன் சரியான பாதையில் சமுதாயத்தை மாற்றி அமைப்பதற்கானப் போராட்டத்தை நடத்த முடியும். ஓர் மாற்றம் ஏற்பட, அதை இயக்கும் விதியைச் சரியாகப் புரிந்துகொண்டு பயன்படுத்தும் போதுதான் இயற்கையின் சக்தியை மனிதனால் கட்டுப்படுத்தவும், ஒரு பொருளின் குறிப்பிட்ட நிலையை மாற்றவும் முடியும். அதைப் போன்றே, ஒரு சமுதாயத்தை மாற்றவும் முடியும், அல்லது அந்த மாற்றங்களைக் கட்டுப்படுத்தும் விதிகளுக்கிணங்க மாற்றத்தின் செயல்முறைப் போக்கைத் துரிதப்படுத்தவும் முடியும். இப்படிச் செய்யாமல் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமென்றோ, மனிதன் முன்னேறிச் செல்வான் என்றோ கூறினால், அது வெறுமனே தனிநபர் மூளையில் உதிக்கின்ற அழகிய கற்பனையாகும். ... இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் அடிப்படையில் அமைந்த மார்க்சியம் ஒன்றே இந்த உண்மையை முதன் முதலில் மக்களிடம் எடுத்துரைத்தது.


தொடர்ச்சி 5ம் பக்கம்


# இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும் திட்டங்கள் தேசியக் கல்விக் கொள்கை 2020இன் ஓர் அங்கமே

*அரசுப் பள்ளி ஆசிரியர்கள் மீதான பணிச்சுமையை குறைக்கக் கோரியும், இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும் போன்ற முறைசாரா கல்வித் திட்டங்களை முழுவதுமாக கைவிடக் கோரியும் அகில இந்திய கல்விப் பாதுகாப்பு கமிட்டியின் (All India Save Education Committee) தமிழ்நாடு மாநிலக் குழு விடுத்துள்ள அறைகூவல்!*

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தரமான கல்வி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் லட்சக்கணக்கான மாணவர்கள் அங்கு பயின்று வருகின்றனர். ஆனால் துரதிஷ்டவசமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள், கற்பித்தல் அல்லாத பல்வேறு பணிகளில் ஆண்டு முழுவதும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

ஏற்கனவே தமிழகம் முழுவதும் ஆசிரியர் பற்றாக்குறையால் பல்வேறு பள்ளிகள் தத்தளித்து வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் ஆசிரியர்கள், கற்பித்தல் பணிகளை செய்ய முடியாத அளவிற்கு வேறுபணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதனால் குழந்தைகளுக்கு ஏற்கனவே இருந்து வரும் கற்றல் இடைவெளி கூடுதலாகி பல சிக்கல்களை உருவாக்கியுள்ளது.

உதாரணமாக, வருவாய்த் துறைக்குக் கீழே வரும் வாக்குச்சாவடி நிலை அலுவலகப் பணி (BLO), வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்து அவர்களது ஆதார் எண் விவரங்கள் சேகரித்து வாக்காளர் அடையாள அட்டை எண்ணுடன் இணைத்தல் பணி, ஆண்டு முழுவதும் வாக்காளர் அடையாள அட்டை பெறுவோருக்கான புதிய சேர்க்கை, நீக்கல், இடம் மாறியவர்களுக்கு மாற்றிக் கொடுத்தல் போன்ற பல பணிகளை, கற்பித்தல் பணிகளை மட்டுமே செய்ய வேண்டிய ஆசிரியர்களுக்குத் தருகின்றனர்.

பள்ளிக்குள்ளேயே 'எமிஸ்' (Education Management Information System – EMIS) என்று அழைக்கப்படும் கல்வி தகவல் அளிக்கும் முறையினால் மாணவர்கள் கல்வி குறித்த 32 விதமான தகவல்களை சேகரித்து அவற்றை கணினியில் ஏற்றும் பணியும் ஆசிரியர்கள் மீதே சுமத்தப்படுகிறது. ஆண்டு முழுவதும் பல காலங்களில் கல்விப் பயிற்சிக்கு செல்லுதல், இலவச பொருட்களை குறிப்பிட்ட இடத்திலிருந்து பள்ளிக்கு எடுத்து வரும் பணி, முதன்மைக்கல்வி அலுவலகம் செல்லும் பணி, அலுவலகத் தபால்கள் குறித்து கணினியில் பதில் தருதல், விபரங்கள் தரும் பணி, பள்ளிகள் குறித்து பல்வேறு பணி என ஏராளமான கற்பித்தல் அல்லாத பணிகளை ஆசிரியர்கள் அன்றாடம் செய்து வருகின்றனர்.

இன்றைக்கு உள்ள காலச்சூழலில் பள்ளிகளில் குழந்தைகளை உடனிருந்து கவனிக்க வேண்டிய ஆசிரியர்களின் பொன்னான நேரத்தை அதற்கு செலவிட விடாமல், கற்பித்தல் அல்லாத பணிகளைத் தொடர்ந்து


தொடர்ச்சி 4ம் பக்கம்

# இட ஒதுக்கீடு – மக்களை ஏமாற்றும் ஒரு தந்திரமே

*7 நவம்பர், 2022 அன்று அரசியலமைப்புச் சட்டம் 2019ஐ (103 வது திருத்தம்) சுட்டிக்காட்டி, பொருளாதார ரீதியில் பலவீனமாக இருக்கும், ஒதுக்கீடு வரம்புக்குள் வராத பிரிவினருக்கு உச்ச நீதிமன்றம் 10% ஒதுக்கீடு வழங்க அனுமதித் திருப்பதைக் கடுமையாக விமர்சித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் 9, நவம்பர் 2022 அன்று வெளியிட்ட அறிக்கை :*

7 நவம்பர், 2022 அன்று, அரசியலமைப்புச் சட்டம் 103வது திருத்தத்தைச் சுட்டிக்காட்டி, பொருளாதார ரீதியில் பலவீனமாக இருப் போருக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு தரும் அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் 103வது பிரிவு சரியே என பெரும்பான்மை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 7 நவம்பர், 2022 அன்று தீர்ப்பளித் துள்ளார்கள். இது முற்றிலும் ஏமாற்றமளிக்கக் கூடியதும், நமது நாட்டின் ஒடுக்கப்படும் கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் பகைமையைத் தூண்டிவிடும் உட்கூறுகளைக் கொண்டதாகும்.

ஆழ்ந்த சமூக மற்றும் கலாச்சார பிரச்சினை களைக் கருத்தில் கொண்டு எஸ்சி (பட்டி யலினத்தவர்) மற்றும் எஸ்டி (பழங்குடியினர்) வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்கும் ஷரத்தானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது. அனுகூலமற்ற சூழலிலிருக்கும் உயர் ஜாதியினர் என அழைக்கப் பட்டவர்களால் பல நூறு ஆண்டுகளாக மனிதாபிமானமற்ற முறையில் ஒடுக்கப்பட்ட, அதன் பின்னர் ஆங்கிலேய ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப் பட்ட தலித்துக்கள், பழங்குடியினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினரை உயர்த்தும் நோக்கத்தில், வெளிப்படையாகக் கூறினால், அவர்களின் பொருளாதார, அரசியல், சமூகக் கலாச்சார பின்னடைவிலிருந்து அவர்கள் மீண்டு வருவதற்கான நோக்கத்தில் மற்றும் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் பிற பிரிவு மக்களுக்கு இணையாக பிரதிநிதித்துவத்தைப் பெரும் நோக்கத்தில் அது கொண்டுவரப்பட்டது.

இந்த இட ஒதுக்கீடு என்பது 10 ஆண்டுகளுக்கு இருக்கும் என்றும் அதன் பின் இட ஒதுக்கீடானது எந்த அளவுக்கு அதன் நோக்கத்தை நிறைவேற்றிருக்கிறது என்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என அதில் சொல்லப் பட்டிருக்கின்றது. ஆனால், வரலாற்று ரீதியில் இப்பிரிவினர்மீது திணிக்கப்பட்ட சமூகப் பாகுபாட்டைக் களையவேண்டுமானால் அதற்கு அரசாங்கத்தின் விடாமுயற்சி என்பது தேவைப்படுகிறது.

ஆனால் உண்மை யாதெனில், சுதந்திர இந்தியாவில், ஏகபோக மூலதனத்துக்கு சேவகம் செய்துவந்த அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் யாவும் இப்பிரிவு மக்களின் சமூகச் சூழலை மேம்படுத்த எதுவும் செய்யவில்லை. மாறாக, அனைவருக்கும் கல்வி மற்றும் வேலை தர இயலாததால், ஒடுக்கப்படும் மக்களிடையே பிளவை ஏற்படுத்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அவை ஒரு தந்திரமாகப் பயன்படுத்தின, ஏழை மக்களின் ஒரு பிரிவினரை மற்ற பிரிவினருக்கு எதிராகத் திருப்பிவிட்டன. எந்த நோக்கத்துக்காக இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டதோ, அது நிறைவேறவில்லை. ஆனால் காலப்போக்கில் மிகவும் பின்தங்கிய வகுப்பினரின், சலுகைகள் ஏதும் கிடைக்கப்பெறாத மக்களின், பிரதானமாக எஸ்சி மற்றும் எஸ்டி வகுப்பினரின் நிலைமை, தாழ்த்தப்பட்ட பிற பிரிவு மக்களைப் போலவே தொடர்ச்சியாக மேலும் மோசமடைந்தது.

தாராளமயம் மற்றும் தனியார்மய இச் சகாப்தத்தில் அனைத்து முதலாளித்துவ அரசாங்கங்களும் அனைத்து சமூக நலத் திட்டங் களையும் திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. கல்வியை தனியார் வசம் ஒப்படைத்துக் கொண்டிருக்கின்றன. எல்லாவற்றையும் குறைப்பது என்பதே அரசாங்கங்களின் நியதியாக ஆகிவிட்டது. ஆக, பணியிடங்களை மற்றும் காலியிடங்களை ஒழிக்கும் கொள்கையை அனைத்து முதலாளித்துவ அரசாங்கங்களும் கொண்டிருப்பதால் பொதுக் கல்விக்கான வாய்ப்பும் அரசாங்க வேலை வாய்ப்புகளும் கடுமையாகச் சுருங்கிவிட்டன. ஆகையினால், இட ஒதுக்கீடு என்பதெல்லாம் கேலிக் கூத்தேயன்றி வேறொன்றுமல்ல. ஆசை காட்டுவதின் மூலம், ஒரு பிரிவினரை இன்னொரு பிரிவினருக்கு எதிராகத் திருப்பிவிடுவதின் மூலம் ஒட்டு வங்கியை உருவாக்க நினைக்கும் அதிகார வெறி பிடித்த முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் கைகளிலிருக்கும் ஆயுதமே இது.

அதிர்ச்சியளிக்கும் விஷயம் என்னவென்றால், ஈவிரக்கமற்ற 75 ஆண்டு கால முதலாளித்துவச் சுரண்டலின் தவிர்க்கவியாலா விளைவால், பணம் படைத்தோர் மேலும் பணக்காரர்களாக இன்று ஆகிக்கொண்டிருப்பதும் ஏழைகள் மேலும் ஏழைகளாக ஆகிக்கொண்டிருப்பதும்தான். இட ஒதுக்கீட்டுக் கொள்கை அமலில் இருந்த போதிலும், இப்பிரிவைச் சார்ந்த ஏழை மக்கள் ஒரு சில பணக்காரர்களாக ஆகியிருப்பதும், ஏனையோர் மேலும் ஏழைகளாக ஆகிக்கொண்டிருப்பதும்தான் யதார்த்த உண்மையாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும், இக்கொள்கையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, இப்பிரிவினரின் ஒரு மேல்தட்டு மக்கள் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் நன்மைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய இன்றைய சூழலில், பொதுப் பிரிவிலுள்ள பொருளாதார ரீதியில் பலவீனமாக உள்ள மக்கட் பிரிவினரை உயர்த்துவதற்காக கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த 10 சதவீத இட ஒதுக்கீடானது தோல்வியில்தான் போய் முடியும், ஆக, இது ஒரு ஏமாற்று வேலையேயன்றி வேறொன்றுமல்ல. இட ஒதுக்கீடு என்கின்ற இந்தக் கொள்கையானது பாடுபடும் மக்களிடையே பிரிவினையை, மோதலையே தூண்டிவிடும்.

எனவே, ஆளும் வர்க்கத்தின் இத்திட்டத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனவும், தங்களை அணி திரட்டிக்கொண்டு, தங்களின் நியாயமான கோரிக்கையான அனைவருக்கும் வேலை வேண்டும் என்பதை நிறைவேற்றக் கோரியும் ஒரு சக்திவாய்ந்த ஜனநாயகப் போராட்டத்தை வளர்த்தெடுக்க வேண்டுமாய் நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். தங்கள் நியாயமான கோரிக்கையை வென்றிட முதலாளித்துவ அரசாங்கத்தை நிர்ப்பத்திக்க இதுவே ஒரே வழி ■

# நிரந்தரப் பணிகளையும் வேலை வாய்ப்பையும் ஒழிக்கும் அரசாணையை தமிழக அரசாங்கமே திரும்பப் பெறு!

*மனிதவள மேம்பாட்டுத்துறை வெளியிட்டுள்ள அரசாணை எண் 115ஐ தமிழக அரசாங்கம் உடனடியாக திரும்பப் பெற வேண்டும் எனக் கோரி அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (AIDYO) தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி 10.11.2022 அன்று வெளியிட்ட அறிக்கை:*

தமிழக அரசுப் பணிகளுக்கான ஆள் தேர்வு மற்றும் பயிற்சிகளில் மாற்றங்களைச் செய்தல், நிரந்தரப் பணியாளர்களை நியமிக்காமல் தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த முறையில் பெற்று பணியாளர்களை நியமித்தில் உள்ளிட்ட நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு பரிந்துரைப் பதற்காக ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளைக் கொண்ட குழுவை தமிழக அரசு அமைத்திருக்கிறது. நிரந்தரப் பணிகளையும், வேலைவாய்ப்பையும் ஒழிக்கும் தமிழக அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறையின் இந்த நடவடிக்கையை ஏஐடிஒய்ஒ வன்மையாகக் கண்டிகிறது.

ஆட்சிக்கு வந்தால் அரசுத் துறைகளில் 5.5 இலட்சம் வேலைவாய்ப்புகளை நிரப்புவோம், தமிழக முழுவதும் 3.5 இலட்சம் காலியிடங்களை நிரப்புவோம், புதிதாக 2 லட்சம் பணியிடங்கள் உருவாக்குவோம், தமிழகத்தில் உள்ள பள்ளிக் கல்வித் துறையில் பகுதிநேர ஆசிரியர்களை நிரந்தரம் செய்வோம், நீர் நிலைகள் பராமரிப்புப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்கள், அறநிலையப் பாதுகாப்புத்துறைப் பணியாளர்கள், மக்கள் நலப் பணியாளர்கள் அனைவரையும் நிரந்தரம் செய்வோம் என திமுக தேர்தல் வாக்குறுதி அளித்தது. அதற்கு முற்றிலும் எதிராக மத்திய அரசாங்கத்தின் பொதுக்கொள்கை மையத்தின் (Centre for Policy Research) வழிகாட்டலின்படி, அரசுப் பணியிடங்களை ரத்து செய்ய முயல்வதும், நிரந்தரப் பணியாளர்களுக்குப் பதில் தற்காலிகப் பணியாளர்களை நியமிக்க முயல்வதும் நடந்துகொண்டிருக்கிறது.

எவ்வாறு மத்திய அரசாங்கம் உலகமயக் கொள்கையின் தனியார்மயம், தாராளமயத்தை நடைமுறைப்படுத்தி அனைத்துத் துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்காமல், தற்காலிக பணியாளர்களை மட்டுமே வைத்துக் கொண்டிருக்கிறதோ அது போலவே, திமுக அரசாங்கமும் அதே கொள்கையைப் பின்பற்றி, இருக்கும் கொஞ்சநஞ்ச வேலை இடங்களையும் சமூகப் பாதுகாப்பு ஏதுமில்லாத தற்காலிக ஒப்பந்தப் பணிகளாக மாற்ற, மனிதவள சீர்திருத்தக் குழுவை அமைத்திருப்பது இளைஞர் விரோத, மக்கள் விரோதச் செயல்படாகும்.

தமிழக அரசாங்கம் உடனடியாக அரசாணை எண் 115ஐ திரும்பப்பெறுவதுடன் காலியாக இருக்கும் அனைத்து துறைகளிலும் இளைஞர்களை வேலைக்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

எனவே இளைஞர்களும் அனைத்துபிரிவு ஜனநாயக எண்ணம் கொண்ட அனைவரும் தமிழக அரசாங்கத்தின் இளைஞர் விரோத, மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராகப் போராட முன்வர வேண்டும் என்று அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் அறைகூவல் விடுக்கிறது ■

**பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் பிறந்த நூற்றாண்டையொட்டி தமிழில் வெளியிடப்பட்ட படைப்புக்கள்**

- **மொழிப் பிரச்சினை**
- **கம்யூனிஸ்ட் நடத்தை நெறி**
- **மார்க்சிசமும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியும்**
- **இந்தியாவில் கலச்சார இயக்கமும் நமது கடமைகளும்**
- **மார்க்சிச அறிவியல் ஓர் அறிவியல்பூர்வ இயக்கயியல் முறையியல்**
- **விவசாயிகள் வாழ்வாதாரப் பிரச்சினைகள்**

# மாற்றுக் கருத்தை தடைசெய்யும் பிரதமரின் எச்சரிக்கை ஓர் அப்பட்டமான மிரட்டல்

“துப்பாக்கியுடனிருந்தாலும் அல்லது பேனாவுடனிருந்தாலும், இந்த நாட்டு இளைஞர்கள் தவறாக வழிநடத்தப் படுவதை தடுக்க நக்சலிசத்தை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும்” எனஅக்டோபர் **27, 2022** அன்று ஃபரிதாபாதில் நடைபெற்ற அனைத்து மாநில உள்துறை அமைச்சர்கள், டிஜிபிக்களின் மாநாட்டில் வீடியோ கான்பரன்ஸ் மூலம் பிரதமர் மோடி பேசியுள்ளார்.

மேலும், சட்டம்–ஒழுங்கு அமைப்பை வலுப்படுத்துவதற்காக அவருடைய அரசாங்கம் பல்வேறு சீர்திருத்தங்களை அறிமுகப் படுத்தியுள்ளதாகவும் நாட்டில் அமைதியான சூழலைப் பராமரிக்க அவை உதவியுள்ளதாகவும் கூறியிருக்கிறார். “தீவிரவாதத்திற்கெதிரான தீர்மானகரமான போரில் யுஏபிஏ (Unlawful Activities (Prevention) Act) போன்ற சட்டங்கள் இவ்வமைப்பிற்கு வலுசேர்த்துள்ளதாகவும் அவர் கூறினார். வழக்கமான கிரிமினல் சட்டத்தில் ஒரு வழக்கை விசாரிக்க புலனாய்வு ஏஜென்சிக்களுக்கு **60–90** நாட்கள் அளிக்கப்பட்டுள்ளதற்கு மாறாக இந்த கொடிய யுஏபிஏ சட்டத்திருத்தத்தின்மூலம் **180** நாட்கள் அளிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் **6** மாதத்திற்கு பிறகே ஜாமீன் பெற மனு அளிக்கமுடியும். குற்றஞ் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக ஏதேனும் உண்மைக்கான முகாந்திரம் இருந்தாலும் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு நீதிமன்றம் ஜாமீன் வழங்க முடியாது. ஏற்கெனவே பல எதிர்ப்பாளர்கள் ‘நகர்புற நக்சல்கள்’ என முத்திரை குத்தப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர். கருப்புச் சட்டங்களை கண்மூடித்தனமாக அமுல்படுத்தி, அனைத்து எதிர்ப்புக்களும் அடக்கி ஒடுக்கப் படுகின்றன. தேவைப்பட்டால், பெகாசஸ் உளவு மென்பொருளைப் பயன்படுத்தி பாஜக அரசாங்கத்தின் மீதான எந்த விமர்சனமும் தீவிரவாதம் அல்லது தேசவிரோதம் என முத்திரை குத்தப்படுகிறது. ஹரியாணாவில் நடைபெற்ற பாஜகவின் கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் தீவிரவாதம், பண மோசடிகளை கட்டுப்படுத்த பல்வேறு மாநிலங்களில் என்ஐஏவை நிறுவவேண்டுமென முன் மொழிந்தார். தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுதல் எனும் சாக்கில் எதிர்ப்புக் குரலை ஒடுக்குவது சம்மந்தமான அனைத்து எதேச்சதிகார அதிகாரங்களும் மேலும்மேலும் மத்திய அரசாங்கத்தின் கரங்களில் ஒன்றுகுவிப்பதையே அவருடைய முன்மொழிவு குறிக்கிறது.

புதிய, வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தை தீவிரவாத நோக்கங்களுக்காக பயன்படுத்தப் படுவதை தடுப்பது குறித்து ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலின் தீவிரவாதத் தடுப்புக் கமிட்டியின் சிறப்புக் கூட்டம் கடந்த அக். **28, 29** ஆகிய நாட்களில் மும்பை, புது டெல்லியில் நடைபெற்றதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். ‘மனித இனத்திற்கு மிகப்பெரும் அச்சுறுத்தலில் ஒன்றாக தீவிரவாதம் இருக்கிறது’ என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கூறினார். ஆனால் மனித இனத்திற்கெதிரான இந்த அச்சுறுத்தலுக்கு யார் காரணம் என்பது குறித்தோ, பல ஆண்டுகளாக தமது சொந்த அரசியல், ராணுவ நலன்களுக்காக உலகம் முழுவதும் இந்த “தீவிரவாதக் குழு”க்களுக்கு நவீன ஆயுதங்களையும் பயிற்சியையும் அளித்து வந்த யுஎஸ் மற்றும் பிற ஏகாதிபத்திய நாடுகளை, சிஐஏ போன்ற ஏஜென்சிகளை குற்றம் சுமத்தவோ இல்லை. மறைகுறியாக்கப்பட்ட செய்திகளை அனுப்புதல் (Encrpted messaging), டிஜிட்டல் கரன்சி மற்றும் டிரோன்களைப் பயன்படுத்துதல், ஆளில்லா ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்துதல் மெய்நிகர் தனியார் வலைதளம் (Virtual private Network) இணையதள குரல் வழிச் செய்தி (Voice over Internet Protocol -VoIP), சமூக ஊடகங்கள் ஆகியன தீவிரவாதிகளால் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதையும் “தீவிரவாதத்திற்கெதிரான” நடவடிக்கைகள் இருந்தபோதிலும், தீவிரவாத அச்சுறுத்தல், குறிப்பாக ஆசியா, ஆப்பிரிக்காவில் வளர்ந்து கொண்டும் விரிவடைந்துகொண்டும் இருப்பது குறித்துதான் அமைச்சர் கவலைப் பட்டார். இவ்விரண்டு நாட்களிலும் நடைபெற்ற விவாதங்களானது வரையறுக்கப்பட்ட இத் “தீவிரவாத”த்தின் மூலவேரை சுட்டிக்காட்டத் தவறிவிட்டது. தீவிரவாதத்தின் பாதுகாப்பு சொர்க்கம், அதன் சரணாலயங்கள், பயிற்சித் தளங்கள், அதற்கான நிதியுதவி, சித்தாந்த–அரசியல் ஆதரவு, பாதுகாப்புக் கவுன்சிலின் தடைவிதிப்பின் வெளிப்படையான செயற்பாடுகள் போன்ற ‘தீவிரவாதத்தை’ தடுக்கும் சில நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்குவதோடு நின்றுகொண்டது.

‘தீவிரவாத எதிர்ப்பு’ எனும்பெயரில் பத்திரிகையாளர்கள், சிவில் சமூக செயற் பாட்டாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள், அரசியல் எதிரிகளை குறிவைத்து அப்பட்டமான மனித உரிமை மீறல்தான் நடந்திருக்கிறது என கண்டித்த மாநாட்டின் அயர்லாந்து பிரதிநிதிகள் “தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் அடிக்கடி மனித உரிமைகளை மீறுகின்றன” என கூறினர். மனித உரிமைகளுக்கான ஹைகமிஷனர் அலுவலகம் தீவிரவாதத் தடுப்பு எனக்கூறி, பொது இடங்களில் வைக்கப்பட்ட காமிராக்களை ஹேக் செய்து பத்திரிகையாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள், அரசியல் எதிரிகளை குறிவைக்க எவ்வாறு முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது என தனது அறிக்கையை வைத்தது. தீவிரவாத எதிர்ப்பு எனும்பெயரில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தீவிரவாத உணர்ச்சியை அதிகரிக்கிறது. மனித உரிமைகள் மற்றும் ரகசியத்தின் பாதுகாப்பு குறித்த அயர்லாந்தின் நிலைப்பாட்டை நார்வே பிரதிநிதி ஆதரித்தார். ஆன்லைன், ஆஃப்லைன் கருத்து சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் அவர் கூறினார். மேற்கூறப்பட்ட விஷயத்தை வலியுறுத்திய மனித உரிமைகளுக்கான ஹைகமிஷனரின் ஐநா அலுவலகத்தின் மனித உரிமைகள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்ப குழுவின் தலைவரான ஸ்காட் கேம்பெல், “தீவிரவாத எதிர்ப்பு எனும்பெயரில் எதிர்ப்புக் குரலுக்கு எதிராக சட்டத்தை அமலாக்கும் துறைகளால் கண்காணிப்புக் கேமராக்களும் உளவு மென்பொருட்களும் முறைகேடாகப் பயன்படுத்தப்படும் பிரச்சினையை எழுப்பினார். “விமர்சனங்களையும் மாற்றுக்கருத்துக்களையும் அவற்றை வெளிப்படுத்தும் நபர்களையும் அடக்கி ஒடுக்க இதுபோன்ற உளவு மென்பொருட்கள் அவ்வப்போது உபயோகப்படுத்தப்படுகின்றன”. மேலும், போதுமான பாதுகாப்பு முறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தும்வரை இத்தகைய உளவு மென்பொருட்களின் உபயோகத்தையும் சந்தைப்படுத்தலையும் தடை செய்ய வேண்டுமெனவும் கேம்பெல் கூறினார். தீவிரவாதத்தை எதிர்க்க, தீவிரவாதம் அதாவது பயங்கரவாதச் செயல்கள் குறித்த தெளிவற்ற விளக்கங்களைக் கூறி பெரும்பாலும் இவை பயன்படுத்தப்படுகின்றன. சில சமயங்களில் அவற்றை துஷ்பிரயோகம் செய்வதற்கு எதிரான எவ்வித போதிய பாதுகாப்பு முன்னேற்பாடும் இல்லாமல் பரவலான நிர்வாக அதிகாரம் வழங்கப்படுகிறது.

தீவிரவாத எதிர்ப்பு எனும் பெயரில் பல்வேறு நாடுகளிலுள்ள அரசாங்கங்கள், அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்ப்போரை அடக்கி ஒடுக்க தங்களது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்து கிறார்கள் என்பது மேற்கூறப்பட்ட விஷயங் களிலிருந்து தெளிவாகிறது. எனவே, ‘தீவிரவாத எதிர்ப்புக் கமிட்டி’யின் உண்மையான இலக்கு ‘தீவிரவாதி’ என்றழைக்கப்படும் குழுக்கள் அல்ல. மாறாக, அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்ப்போரும் மக்கள்மீது திணிக்கப்படுகின்ற கண்காணிப்பு கேமராக் களுக்கும் உளவு கட்டமைப்புக்களுக்கும் எதிரானவர்களேயாகும். அரசாங்கத்தின் இது போன்ற நடவடிக்கைகள் சுதந்திரம், சிவில் உரிமைகள், அரசியலமைப்புச் சட்டத்தின்படியான மக்கள் உரிமைகளை தடைசெய்யவேயாகும். இந்தியா உள்ளிட்ட அனைத்து ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளிலும் நடைபெறும் ஈவிரக்கமற்ற, மனிதாபிமானமற்ற, கொடூரமான சுரண்டலாலும் ஊழலாலும், ஒடுக்குமுறை அடக்குமுறையால் பாதிக்கப்படும் மக்கள் அவற்றிற்கெதிராக அவ்வப்போது கிளர்ந் தெழுகின்றனர். அந்த எதிர்ப்பை முறியடிக்க இந்த முதலாளித்துவ அரசாங்கங்கள் தங்கள் பாசிச கோர முகத்தைக் காட்டுகின்றனர். இத்தகைய பாசிச நடவடிக்கைகளால் மக்கள் எதிர்ப் பியக்கத்தை நீண்ட நாட்கள் அடக்கிவைக்க முடியாது என்ற போதிலும் இதனை மேற்கொள்கின்றனர். எது எப்படியிருப்பினும் இறுதி அத்தியாயத்தை எழுதுபவர்கள் மக்களே, கொடுங்கோல் ஆட்சியாளர்கள் அல்ல! ■

## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டுப் பொதுக்கூட்டம்




**புதுச்சேரி மாநிலத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் சார்பாக நவம்பர் 30, 2022 அன்று நடந்த பொதுக்கூட்டத்திற்கு தோழர் சங்கரன் தலைமை தாங்கினார், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) புதுச்சேரி மாநிலக்குழு தோழர்கள் யு முத்து, எஸ் சிவகுமார், மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் அனவரதன், மாநிலச் செயலாளர் தோழர் லெனின்துரை ஆகியோர் உரையாற்றினர், இறுதியாக தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி சிறப்புரையாற்றினார்**

# நவம்பர் 25, 2022 ஈரான் மக்களின் போராட்ட ஆதரவு நாள் அனுசரிப்போம்!

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 22.11.2022 அன்று வெளியிட்ட அறிக்கை:*

ஈரானில் பெண்களை அடக்கி ஒடுக்கும் மத கட்டுத்தளைகளை உடைத்தெறிந்து பெண் விடுதலைக்காகவும் பாசிச இஸ்லாமிய அதிகாரத்தைத் தூக்கி எறிந்து ஜனநாயக சக்தியை கொண்டு வருவதற்காகவும் ஜனநாயக எண்ணம் கொண்ட மக்களும் குறிப்பாக மகளிரும் இளைஞர்களும் நடத்தி வரும் மகத்தான போராட்டத்தை நாங்கள் பாராட்டி ஆதரித்து துணை நிற்கின்றோம். இப்போராட்டமானது செப்டம்பர் 13 அன்று ஈரானில் தார்மீக (மாரல்) போலீஸ் என்று அழைக்கப்படும் காவல் துறையினரால் ஒரு பெண் முகத் திரை அணியாததால் கொடூரமாக அடித்துக் கொலை செய்யப்பட்டதில் இருந்து துவங்கியது.

மத அடிப்படைவாத பாசிச இஸ்லாமிய அரசுக்கு எதிராக முதலில் பெண்கள் இப்போராட்டத்தைத் துவக்கினர். பின்னர் அரசியல், பொருளாதார, கலாச்சாரச் சுரண்டலுக்கு தொடர்ந்து ஆட்பட்டு வரும் பொதுமக்களும் இப்போராட்டத்தில் இணைந்து தீவிரப்படுத்தினர். போராட்டத்தை ஒடுக்க இஸ்லாமிய மதவெறி பாசிச ஆட்சியாளர்கள் காட்டுமிராண்டித்தனமாக காவல்துறையை ஏவி நூற்றுக்கணக்கில் பெண்களை கொலை செய்து, ஆயிரக்கணக்கான பெண்கள் குழந்தைகள் உட்பட பொதுமக்களைப் பிடித்து சித்திரவதை செய்து வருகின்றனர். ஆனால் பாராட்டத்தக்க வகையில் பெண்களும் பொது மக்களும் தீர்மானகரமாக அனைத்து கொடூரங்களையும் எதிர்கொண்டு தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்த நியாயமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டத்தை ஆதரித்து துணை நிற்கவும் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை பாசிச ஈரான் நிர்வாகம் கைவிடக் கோரவும் உலகம் முழுவதும் உள்ள ஜனநாயக எண்ணம் கொண்ட பொதுமக்களை நாம் அறை கூவி அழைக்கின்றோம்.

இந்திய மக்கள் சார்பாக இப்போராட்டத்திற்குத் துணை நிற்கவும் இப்போராட்டம் வெற்றி பெறவும் வரும் நவம்பர் 25, 2022 தினத்தை ஈரான் மக்களின் போராட்ட ஆதரவு தினமாக அனுசரிக்க எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி முடிவு செய்துள்ளது. அன்றைய தினம் நாட்டின் எல்லா மாநிலத் தலைநகரங்களிலும் பல்வேறு இடங்களிலும் கூட்டங்களையும் ஆர்ப் பாட்டங்களையும் நடத்தவும் முடிவு செய்துள்ளது. இந்நிகழ்ச்சிகளில் இந்திய மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு அவற்றை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறோம் ■

# விவசாயிகள் மனு சமர்ப்பித்ததன் பின்னணியில் வத்தலக்குண்டு பகுதியில் ஆய்வு மேற்கொண்ட மதுரை வேளாண் திட்ட அலுவலர்

வத்தலக்குண்டு சுற்று வட்டார விவசாயிகள் எமது விவசாய சங்கமான அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் (All India Kisan Khet Mastoor Sankethan - AIKKMS) சங்கம் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, வத்தலக்குண்டு வட்டாரக் கமிட்டி தலைமையில் அப்பகுதியிலிருக்கும் வைகை, மஞ்சளாறு, சோத்துப்பாறை அணைகளின் உபரி நீரை வறண்டு கிடைக்கும் தங்கள் பகுதி கண்மாய் களுக்குத் திருப்பிவிடக் கோரி பல மாதங்களாகப் போராடி வருகின்றனர். முன்னதாக. தமிழ்நாடு முதலமைச்சர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு இது குறித்து மனுக்கள் அனுப்பப்பட்டிருந்தது. அதன் ஒரு பகுதியாக ஏஐகேகேஎம்எஸ் மாநிலச் செயலாளர் தோழர் சுருளியாண்டவர், உப தலைவர் தோழர் சதீஷ் ஆகியோர் தலைமையில் திட்ட ஆய்வு மேற்கொள்ளுமாறு மதுரை வேளாண் திட்ட அலுவலரிடம் மனு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, மேற்படி மதுரை வேளாண் திட்ட அலுவலர் அவர்கள் ஏஐகேகேஎம்எஸ் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் சுருளியாண்டவர் அவர்களைத் தொடர்புகொண்டு 10.11.2022 அன்று ஆய்வு மேற்கொள்ள வருவதாகக் கூறியதன்பேரில் தோழர் சுருளியாண்டவர் மற்றும் விவசாய சங்க உறுப்பினர்கள் மற்றும் கிராமவாசிகள் சம்மந்தப்பட்ட பகுதிக்கு மதுரை வேளாண் திட்ட



**திட்ட அலுவலருடன் ஏஐகேகேஎம்எஸ் மாநிலச் செயலாளர் மற்றும் அப்பகுதி விவசாயிகள்**

அலுவலர் அவர்களுடன் சென்று ஆய்வுக்கு உதவி செய்தனர். ஆய்வை மேற்கொண்ட வேளாண் திட்ட அலுவலர் விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாக உறுதியளித்தார் ■

# இல்லம் தேடிக் கல்வி . . .

*1ம் பக்கத் தொடர்ச்சி*

கல்வித்துறை ஆசிரியர்கள் மீது திணித்து வருகிறது. இது ஆசிரியர்கள் மீது கடுமையான பணிச்சுமையை ஏற்றுவதோடு அவர்களிடம் மன உளைச்சலையும் ஏற்படுத்தி, கற்பித்தல் பணியையே பாழாக்கி வருகிறது. மேலும், பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாத சூழலில் பல தவறான பாதையில் மாணவர்கள் பிறழ்ந்து போகும் நிலை அதிகரித்துள்ளது.

இது மட்டுமன்றி இல்லம் தேடி கல்வி என்ற பெயரில் முறை சாராக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி, முறை சார்ந்த கற்பித்தல் கற்றல் செயல்முறையின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு வருகிறது. இல்லம் தேடிக் கல்விப் பணிகளுக்கு ஆசிரியர்களை பயன்படுத்துவது மேலும் அவர்கள் மீது பணிச் சுமையை ஏற்றுகிறது.

இது மட்டுமின்றி எண்ணும் எழுத்தும் என்ற திட்டத்தின் கீழ் மூன்றாம் வகுப்பில் இருக்கும் மாணவர்களுக்கு எண்களையும் எழுத்துக்களையும் கற்பிக்கிறோம் என்ற பெயரில் கற்றல் செயல்முறை மிகவும் காலம் தாழ்த்தப்படுகிறது. இது மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் சலிப்பையே ஏற்படுத்தி வருகிறது.

இவ்வாறு அரசுப் பள்ளிகளில் கற்பித்தல் கற்றல் செயல்முறை போக்கு பெரிதும் பாதிப்படைந்துவிட்டது. மேலும் இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும் திட்டம் போன்றவற்றால் அரசுப் பள்ளிகளில் முறைசார்ந்த கல்வி அமைப்பு செயல்பாடு கேள்விக்குறியாகி உள்ளது.


அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்கள் மீது சுமையை ஏற்றுவதும் இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும் திட்டம் போன்றவை அரசுப் பள்ளிகளில் இருந்து தனியார் பள்ளிகளை நோக்கி மாணவர்களை விரட்டும் திட்டம் ஆகும். இது தேசிய கல்விக் கொள்கை 1986, தேசியக் கல்விக் கொள்கை 2020ஐப் பின்பற்றியே கொண்டுவரப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளிகளில் கற்பித்தல் கற்றல் செயல்முறைப் போக்கை மீண்டும் உயிர்ப்பிக்க கற்பித்தல் கற்றல் செயல்முறையைத் தவிர வேறு எந்தப் பணிக்கும் ஆசிரியர்களை ஈடுபடுத்தக் கூடாது என்பதை அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் தமிழ்நாடு குழு அரசாங்கத்தைக் கோருகிறது. கோடானு கோடி இளைஞர்கள் வேலையின்மை பிரச்சனையில் தவித்து வருகையில் அவர்களுக்கு அந்தப் பணியை வழங்குவதே சரியான தீர்வாகும்.

மேலும் இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும் திட்டம் போன்ற முறைசாராக் கல்வித் திட்டங்களை உடனடியாகக் கைவிடுமாறும் அகில இந்தியக் கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் தமிழ்நாடு குழு தமிழக அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

அரசுப் பள்ளிகளில் கற்பித்தல் கற்றல் செயல்முறைப் போக்கு மீண்டும் உயிர் பெறவும் முறைசாராத் திட்டங்களான இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும் திட்டம் ஆகிவற்றை உடனடியாக தமிழக அரசாங்கம் கைவிட அழுத்தம் தரும் வகையில் ஜனநாயக இயக்கங்களை முன்னெடுக்குமாறு அனைத்து ஆசிரியர் சங்கங்களையும் பாதிக்கப்பட்டிருக்கும் அனைத்து ஆசிரியர்களையும் அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் தமிழ்நாடு குழு அறைகூவி அழைக்கிறது ■

# விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்தி வத்தலக்குண்டில் தெருமுனைக் கூட்டம்



தமிழ்நாடு ஐக்கிய விவசாயிகள் (எஸ்கேஎம்) முன்னணியின் அங்கமாக இருக்கக்கூடிய நமது விவசாயிகள் சங்கமமான ஏஐகேகேஎம்எஸ் வலிமையாகச் செயல்பட்டுவரும் திண்டுக்கல் தேனி மாவட்டப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் அதற்கான பிரச்சாரக் கூட்டங்களை ஏற்பாடு செய்யும் பொறுப்பு எஸ்கேஎம் மாவட்டத் தலைமையால் நமக்குக் கொடுக்கப்பட்டது. அதனை நிறைவேற்றும் பொருட்டு நம் திண்டுக்கல் தேனி மாவட்ட செயல்பாட்டாளர்கள் அதற்கான பணிகளை செவ்வனே மேற்கொண்டனர். தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் வத்தலக்குண்டு நகரத்திலும், பல்வேறு கிராமங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் நமது விவசாய அமைப்பின் மாநிலச் செயலாளர் தோழர் சுருளியாண்டவர், உப தலைவர் தோழர் சதீஷ், உதவிச் செயலாளர் தோழர் சுரேஷ் மற்றும் நம் அமைப்பின் செயல்பாட்டாளரான தோழர் பாண்டி உள்ளிட்ட பிற இடதுசாரி விவசாய அமைப்பின் தலைவர்கள் பிரச்சார உரையாற்றினர் ■

# தோழர் சிப்தாஸ் கோஷ் எடுத்துரைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் நவம்பர் புரட்சியின் படிப்பினைகள்

*1ம் பக்கத் தொடர்ச்சி*

*(மார்க்சிசம் ஓர் அறிவியல்பூர்வ இயக்கயியல் முறையியல், தோழர் சிப்தாஸ் கோஷ் தேர்வுநூல் -IV)*

... அறியாமையில் இருக்கும் தொழிலாளிகளும் விவசாயிகளும் படிப்பறிவற்ற உழைக்கும் மக்களும் ஆளும் முதலாளிகளை அல்லது வெல்லற்கரிய ஜார் மன்னராட்சியை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிய முடியும் என உலக மக்களால் ரஷ்யப் புரட்சிக்கு முன்பு கற்பனைகூட செய்யமுடியவில்லை. **1917** பிப்ரவரியில் நடந்த புரட்சியில் ஜார் மன்னர் ஆட்சி ரஷ்ய முதலாளித்துவ வர்க்கத்தால் தூக்கியெறியப்பட்டதன் மூலம், பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி வெற்றிகரமாக நிறைவேறியது. ஆயினும் அதிகாரம், ஜார் மன்னருக்கு எதிராக பாட்டாளிவர்க்கத்துடன் இணைந்து போராடிய ரஷ்ய முதலாளித்துவ வர்க்கத்தின் கைக்குச் சென்றுவிட்டது. ஆக, பிப்ரவரி புரட்சிமூலம் ரஷ்ய முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதியான கெரன்ஸ்கியின் ஆட்சி ஏற்பட்டிருந்தாலும், கூடவே அதற்கு இணையாக, ரஷ்ய தொழிலாளர்கள் விவசாயிகள் அடங்கிய சோவியத்துகளும் (மக்கள் கமிட்டிகள்) இரட்டை அதிகாரம் என்ற வடிவத்தில் இயங்கிக் கொண்டிருந்தனர். பிப்ரவரி புரட்சி மூலம் அதிகாரத்திற்கு வந்த ரஷ்ய முதலாளித்துவமானது, நிலப்பிரபுத்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்தை முற்றிலுமாக துடைத்தெறியாதது மட்டுமல்ல, பழைய நிலப்பிரபுத்துவ ஒழுங்கை அப்படியே வைத்துக் கொண்டிருந்ததுடன், ஏகாதிபத்திய நாடுகளுடன் முழுமையான உறவையும் பராமரித்துக்கொண்டிருந்தது. எனவே, பிப்ரவரிப் புரட்சியில் ஜார் மன்னரை அகற்றி பூர்ஷ்வாக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தாலும், பொருளாதார அடிப்படையில் சமூகப் புரட்சியின் கட்டத்தை ஆய்வு செய்கையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சியின் கடமைகள் நிறைவேறாமல் எஞ்சியிருந்தன. இவ்விஷயம், ரஷ்ய புரட்சி இயக்கத்தில் மார்க்சிஸ்டுகள் என அறியப்பட்ட, சோசலிச புரட்சியாளர்கள், மென்ஷவிக்குகள் எனப் பலரிடம் தவறான கருத்தை உருவாக்கியது. போல்ஷவிக் கட்சியிலும், பலரிடம், நடைமுறை நோக்கங்களுக்கு மார்க்சிசத்தை பொருளாதார அடிப்படையிலான தீர்மானவாதம் என குறுக்கிவிட்டோரிடமும் தவறான கருத்தை உருவாக்கிவிட்டது. மார்க்சிச தத்துவத்தின் பழைய புரிதல், சரியான இயக்கயியல் பொருள் முதல்வாதமாக இல்லாமல் ஒரு வறட்டுச் சூத்திரமாக இருந்தது. இந்தப் புரிதலின் அடிப்படையில் அவர்கள் பின்வருமாறு கருதினர். சமூக வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் பாதையில் சமூகப் புரட்சியின் கட்டங்களை தவிர்த்துவிட்டு தாவிச் செல்ல முடியாது. ஒன்றன்பின் ஒன்றாகத்தான் கடக்க வேண்டும். எனவே, முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் எஞ்சிய கடமைகளை நிறைவேற்ற சோவியத் தொழிலாளர்களும் விவசாயிகளும் கெரன்ஸ்கி அரசாங்கத்துடன் ஒருபுறம் ஒத்துழைக்க வேண்டும்; மறுபுறம் அவற்றை நிறைவேற்ற மக்கள் இயக்கத்தை நடத்தி கெரன்ஸ்கி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இவ்வாறு, பாராளுமன்ற விதிகளுக்குள் எதிர்ப்பைக் காட்டி முதலில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். இது நிறைவேற்றப்படும் வரை சோசலிசப் புரட்சியைப் பற்றியோ வேறெந்தப் புரட்சியைப் பற்றியுமோ முயற்சிப்பது அர்த்தமற்றதாகும் என்ற தவறான கருத்து, பிப்ரவரிப் புரட்சிக்குப் பிறகு அத்தகைய மார்க்சிஸ்டுகளிடம் அழுத்தமாக நிலவியது. ... தோழர் லெனின் அப்பொழுது பாட்டாளிவர்க்க இயக்க கப்பலின் மாலுமியாக தலைமையில் இருந்தார். தனக்கேற்றாற்போல் அல்லது எதிரிகளின் கருத்தை எப்படியாவது முறியடிக்க, மார்க்சிச மேற்கோள்களை ஆங்காங்கே பொருத்தமற்று எடுத்துக்காட்டி ஒப்பிக்கும் மேற்கூறப்பட்ட மார்க்சிஸ்டுகளைப் போல அவர் இல்லை. மார்க்சிசம் என்பது மார்க்சிச நூல்களில் எழுதப்பட்டவை மட்டுமே அல்ல என்ற அடிப்படை உண்மையை அவர் அறிந்திருந்தார். அவரைப் பொறுத்தவரை மார்க்சிசம் என்பது அறிவியல் முறையியலை கிரகிப்பதாகும். அதாவது மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகியோர் முடிவுகளுக்கு வர கடைபிடித்த மார்க்சிச இயக்கயியல் மற்றும் கணோட்டத்தை கிரகிப்பதும் அவர்கள் அம்முடிவுகளுக்கு வர அதைப் பிரயோகித்த ஸ்தூலமான சூழ்நிலையின் தன்மையைக் கிரகிப்பதுமாகும். மார்க்சிசமென்பது அந்த முறையியலை கற்றுக் கொள்வதாகும். மேற்கோள்கள் காட்டிப் பேசுவது, வரலாற்றில் ஒத்த நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி இணையாகப் பேசுவது இவையெல்லாம் மார்க்சிச முறையியல் அணுகுமுறையாகாது. இவை எதுவுமே மார்க்சிச இயக்கயியல் ஆய்வு ஆகாது. மார்க்சிசம் என்ற பெயரில் இவை மார்க்சிசத்தை கொச்சைப் படுத்துவதாகும். இதனை மிகச் சரியாக லெனின் புரிந்துகொண்டார். எனவேதான் அன்று நிலவிய தவரான கருத்துக்களின் ஆணிவேரை துணிவுடன் தனது ஆகச் சிறந்த படைப்பான 'ஏப்ரல் ஆய்வில்'



**சிப்தாஸ் கோஷ்**

அம்பலப்படுத்தினார். மார்க்சிசம் வெறுமனே பொருளாதாரத்தின் அடிப்படையிலான தீர்மானவாதமன்று என அவர் உலக கம்யூனிஸ்டுகளுக்கு எடுத்துக்காட்டினார். பொருளாதாரத்தை என்றுமே அரசியல் முன்னெடுத்துச் செல்கிறது என்ற லெனினின் மதிப்பு வாய்ந்த கருத்து இந்த ஆய்விலிருந்து புலப்படுகிறது. இதற்குப் பொருள், முதலாளித் துவத்தின் சீரற்ற வளர்ச்சியில், அதில் காணப்படும் நெளிவு சுளிவுகளுடன், வேகமும் தொய்வுகளும் கொண்ட, சில நேரம் முன்னும் சில நேரம் பின்னும் செல்லும் புரட்சிகர இயக்கங்களும், அரசியலும் அரசியல் நிகழ்வுகளும் பொருளாதார வளர்ச்சிமீது செல்வாக்கு செலுத்துகின்றன. எந்த அளவிற்கு என்றால், அரசியல் நிகழ்வுகளும் இயக்கங்களும் தீர்மான சக்திகளாக நிலவுகின்றன. பொருளாதாரத்திற்கும் அரசியலுக்கும் இடையேயான உறவை இவ்வாறாகப் புரிந்து கொள்ள ஒருவர் தவறினாலோ, அல்லது பொருளாதார மாற்றங்கள் நடந்து அதன் பின்விளைவாக அல்லது பிரதிபலிப்பாக அரசியல் மாற்றங்கள் நிகழ்கின்றன என்று நினைத்தாலோ அவர் மார்க்சிசத்தைப் புரிந்த கொள்ளவில்லை என்று பொருள். மார்க்சிசம் என்ற பெயரில் வேறெதையோ அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

... எல்லாவற்றிற்கும் முதலாக, ஏகாதிபத்தியமும் பாட்டாளிவர்க்கப் புரட்சியும் என்ற இந்தக் காலகட்டத்தில் பல்வேறு நாடுகளில் பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிகள் உலக சோசலிசப் புரட்சி அல்லது பாட்டாளிவர்க்கப் புரட்சியின் அங்கமாக ஆகிவிட்டன என இந்த ஆய்வின் மூலம் லெனின் விளக்கியுள்ளார்.

இரண்டாவதாக, உலக முதலாளித்துவம் ஏகாதிபத்தியக் கட்டத்தில் நுழைந்து முற்றிலும் பிற்போக்காகிவிட்ட, அதாவது இந்த ஏகாதிபத்தியக் காலகட்டத்தில், எல்லா நாட்டு முதலாளிதுவவாதிகளும், காலனி நாடுகளில் சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்கும் முதலாளிகளும்கூட, **18, 19**வது நூற்றாண்டுகளில் கொண்டிருந்த புரட்சிகரக் குணாம்சங்களை இழந்துவிட்டனர். ஏனெனில், தற்போது அவர்கள் சர்வதேசிய பிற்போக்கு முதலாளித்துவத்தின் பங்கும் பகுதியுமாக ஆகிவிட்டனர். ...மேலும் ஒரு விஷயத்தை இது தொடர்பாக நாம் மனதில் கொள்ள வேண்டும். அதாவது, புரட்சியை வெறுமனே அமைப்பின் பலத்தைக் கொண்டு மட்டுமே வெற்றிபெறச் செய்ய முடியாது. புரட்சியை வெற்றிபெறச் செய்ய, நூறு ஆயிரக் கணக்கில் எஃகுபோன்ற உறுதிமிக்க தோழர்கள் தேவைப்படுவது மட்டுமல்ல, அதற்கும் மேலாக, அமைப்பிற்கு வெளியே நிற்கும் இலட்சக் கணாக்கான மக்களில் ஒரு பிரிவினரையாவது புரட்சிக்கு செயலற்றவர்களானாலும் ஆதரவாளர் களாக மாற்ற வேண்டும். ஆதரவாளர்களாக இல்லாவிட்டாலும் சரி, குறைந்தபட்சம் இரக்கத்துடன் நடுநிலை கொண்டவர் களாகவாவது அவர்களை மாற்ற வேண்டும். எக்காரணம் கொண்டும் புரட்சிக்கு எதிராக அவர்கள் செல்லக் கூடாது. இச் சூழலை உருவாக்குவது புரட்சியின் வெற்றிக்கு அவசியமாகும்.

எடுத்துக்காட்டாக, புரட்சிக்கு ஆதரவான எல்லா கட்சிகளையும் சக்திகளையும் சேர்த்து சுமார் **5** இலட்சம் பேர் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் மொத்த இந்திய மக்கள் தொகையைப் பொருத்தவரை அது ஒரு சிறுபான்மையாகும். எனவே, தார்மீக ஒழுக்கம், நெறிகள் குறித்து, கண்ணியம் நாகரிகம் குணாதிசயங்கள் குறித்து நமது பெரும்பான்மை மக்களின் கருத்தைப் பற்றிக் கவலைப் படாமல் அக்கறைகொள்ளாமல் இருந்தால், நாம் வேரற்றவர்களாக ஆகிவிடுவோம். சித்தாந்தம் என்பதன்மூலம் நாம் பொருள்படுத்துவது வெளியிலிருந்து வாங்கிய சில வானளாவிய வார்த்தைகளை அல்ல. சித்தாந்தம், போராட்ட

தொடர்ச்சி **6**ம் பக்கம்

# தோழர் சிப்தாஸ் கோஷ் எடுத்துரைக்கும் . . .

5ம் பக்கத் தொடர்ச்சி

இயக்கத்தின் மரபுகளையும் கோட்பாடுகளையும், தெளிவு, நெறிகள், ரசனை மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இயக்கத்தில் பங்கேற்போர், தலைமை தாங்குவோர் அனைவரும் மக்களுடன் இயங்குபவர்களே. எனவே, தமது தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி மக்கள் கவலைப்படப் போவதில்லை என ஒருவர் நினைத்தால், வெறும் அலங்காரச் சொற் பொழிவுகள் மூலம் புரட்சியைக் கொண்டுவந்து விடலாம், தனிப்பட்ட வாழ்க்கையில் எப்படி வேண்டுமானாலும் சுதந்திரமாக வாழலாம் என அவர் நினைத்தால் அது அவ்வளவு சுலபமானதல்ல என்பதை அவர் நினைவில் கொள்ள வேண்டும். எங்குமே புரட்சி அப்படி நடைபெற்றதில்லை. ...சித்தாந்தமும் அடிப்படை அரசியல் பாதையும் தவறாக இருந்தால், ஒரு நேரத்தில் ஒரு கட்சி பலம் பெற்றிருந்தாலும் அது நீடித்து நிலைக்காது.

... நவம்பர் புரட்சியிலிருந்து நாம், புரட்சி வெற்றிபெற மூன்று முன்நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

முதலாவதாக, சரியான புரட்சிகர கருத்தியல், சித்தாந்தம், அடிப்படை அரசியல் பாதை ஆகியவற்றின் மீது, புரட்சிக்குத் தலைமை வகிக்கும் அளவிற்கு ஸ்தாபன பலம் கொண்ட, பாட்டாளிவர்க்கத்தின் உண்மையான புரட்சிகர கட்சி தோன்றியெழ வேண்டும். புரட்சி நடைபெற இரண்டாவது அத்தியாவசிய நிபந்தனை ஒன்றுபட்ட கூட்டணியாகும் (United Front). ஜனநாயக இயக்கத்தின் ஆரம்ப கட்டத்தில் இடது ஜனநாயக சக்திகளின் கூட்டணியைக் கட்டவேண்டும். இந்தக் கட்டத்தைக் கடந்து முதலாளித்துவ எதிர்ப்புப் புரட்சிக்கு அவசியமான பாட்டாளிவர்க்கக் கூட்டணியை அமைக்க வேண்டும். ... புரட்சிக்கு மூன்றாவது முன் நிபந்தனை, ஒன்றுபட்ட மக்கள் போராட்டங்கள் மற்றும் கூட்டுப் போராட்டங்கள் மூலம் அரசியல் அதிகாரத்தை மக்களுக்கு பெற்றுத்தரக் கூடிய மக்களின் சொந்த போராட்டக் கருவிகளாக மக்கள் கமிட்டிகளை உருவாக்க வேண்டும். இவை, கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட, வட்டார, கிராமக் கமிட்டிகளல்ல. இவை தொழிலாளர்களின் விவசாயிகளின் போராட்டங்களால் ரஷ்யாவில் உருவான 'சோவியத்துகள்' போன்றவையாகும். இவை எந்தத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ளவோ புறக் கணிக்கவோ இயன்ற தகுதி படைத்தவைகளாக, அதனை சுதந்திரமாகவும் பருண்மையாகவும் நடைமுறைப்படுத்தும் முன்முயற்சியும் திறனும் படைத்தவையாக இருக்க வேண்டும்.

இம்மூன்று முன் நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்படாவிட்டால், போராட்டங்கள் அலையலையாக வரலாம், இலட்சக்கணக்கான மக்கள் மீண்டும் மீண்டும் தங்கள் இன்னுயிரையும் ஈந்தலாம், ஆனால் புரட்சி வராது. புரட்சியும், எதிர்ப்பும், போராட்டமும் ஒன்றல்ல. புரட்சி என்பதன்மூலம், திட்டமிட்ட இலக்குடன் ஒரு சரியான சித்தாந்தத்தின்மீது, உண்மையான புரட்சிகர அரசியல் பாதைமீது கட்டப்பட்ட, அரசியல்ரீதியாக விழிப்புணர்வுபெற்ற அமைப்புரீதியாகத் திரண்ட மக்களின் ஆயுத எழுச்சியை நாம் குறிப்பிடுகிறோம். (மாபெரும் நவம்பர் புரட்சிப் பதாகையின் கீழ் அணிதிரள்வோம், தோழர் சிப்தாஸ் கோஷ் தேர்வுநூல் III)

... இரண்டாம் உலகப் போரின் முடிவு, சர்வதேச சூழ்நிலையில் ஒரு முக்கிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. மிக முக்கிய அரசியல் மாற்றம் உலக சமூக சக்திகளை துருவமய மாக்கியுள்ளதாகும். அதாவது ஒருபுறம் அமெரிக்கா (யுஎஸ்ஏ) தலைமையிலான ஏகாதிபத்திய ஃபாசிச போர் முகாம்; மறுபுறம் சோவியத் ரஷ்யா (யுஎஸ்எஸ்ஆர்) இறுதியில் .. ஏகாதிபத்திய எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு, சமாதானத்தை, சுதந்திரத்தை நேசிக்கும் உலக மக்கள்முன், சோசலிச முகாமின் தலைவனாக இயற்கையாகவே சோவியத் ரஷ்யா விளங்கியது. மார்க்சிச–லெனினிச அடிப்படையில் உருவான முதல் உழைக்கும் வர்க்க அரசான ரஷ்யா, மாபெரும் தலைவர்கள் லெனின், ஸ்டாலின் அவர்களால் கட்டி வளர்க்கப்பட்டு உலக மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையையும் உயர்ந்த மதிப்பையும் பெற்றுத் திகழ்ந்தது. சோசலிச முகாமிற்கு இயற்கையாகவே சோவியத் ரஷ்யாதான் தலைமை வகித்தது. அன்று, ஏகாதிபத்திய போர் சதிகளுக்கு எதிராக சோசலிச முகாமின் சமாதான இயக்கத்தையும் உலக நாடுகளில் நடைபெற்ற பல்வேறு வெகுஜன இயக்கங்களையும் ஒருங்கிணைக்கும் கடமை சோவியத் ரஷ்யாவிற்கு இருந்தது. சோசலிச முகாமின் தலைவன் என்ற முறையில் சோவியத் யூனியனின் கடமைகளாக இரண்டு இருந்தன. ஒன்று, அணு ஆயுத வல்லமையில் ஏகாதிபத்திய நாடுகளைவிட சோசலிச முகாமின் ஒப்பீட்டளவிலான மேனிலையைப் பராமரிக்க வேண்டும். இதனால், ஏகாதிபத்தியவாதிகளின் அணு ஆயுத மிரட்டலை எதிர்த்து உலக சமாதானத்தை உத்திரவாதப்படுத்த முடியும். மற்றொன்று, அணு ஆயுத மிரட்டல் விடுக்கும் ஏகாதிபத்தியத்தை அம்பலப்படுத்துவது மட்டுமின்றி, நாடுகளுக்கிடையே பகைமையைத் தூண்டி உலகில் இங்கும் அங்குமாக வட்டார அல்லது பகுதியளவு போர்களை உலகத்தில் மூட்டிவிடுவதை தடுக்கவும், வன்முறையைத் தூண்ட பணம் கொடுக்கும் ஏகாதிபத்தியத்தின் கொள்கையைத் தடுக்கவும், பல்வேறு நாடுகளின் ராணுவத்தில் அமெரிக்க உளவுத் துறை சிஐஏ மூலம் சதிகாரர்களைத் தூண்டிவிட்டு உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதைத் தடுக்கவும் முடியும். இன்னும் சில ஆண்டுகளில் புரட்சி நடைபெறப் போகிறது எனச் சொல்லலாம் என்ற நிலைக்கு நாம் உலகப் புரட்சியை நெருங்கிவிட்டோம் என ஒருமுறை நான் கூறினேன். அத்தகைய சூழ்நிலை இரண்டாம் உலகப் போர் காலத்தில் உருவாகியிருந்தது. அந்தத் தருணத்தில் உலக கம்யூனிச இயக்கம் சிக்கலில் சறுக்கி வீழ்ந்துவிட்டது. அதாவது, ஒவ்வொரு நாட்டிலும் சோசலிசப் புரட்சி வெற்றிபெறும் சாத்தியம் அப்பொழுது நிலவியது. ஏகாதிபத்தியவாதிகளின் எதிர்க்கும் சக்தி பலவீனமாக இருந்தது. ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் அனைத்தும் போரால் சேதமடைந்து கிடந்தன. அவை, இருக்கும் உற்பத்தித் திறனைவிட குறைவாக உற்பத்தி செய்தன. மக்களுக்கு உணவைக் கூட வழங்கத் திணறின. (மாபெரும் நவம்பர் புரட்சி பதாகையின்கீழ் அணிதிரள்வோம், தோழர் சிப்தாஸ் கோஷ் தேர்வுநூல் -III) ■

# ஜனவரி 23, நேதாஜியின் 125வது பிறந்த ஆண்டை அனுசரிப்போம்!

இந்திய தேசிய ராணுவம் பர்மா வழியே இந்திய மண்ணில் கொஹிமா என்ற இடத்தை ஆங்கிலேயர்களிடமிருந்து கைப்பற்றி இந்தியக் கொடியை வெற்றிகரமாக நாட்டியது. மிரண்டுபோன ஆங்கிலேய ஆட்சியாளர்கள் விரைவிலேயே அதிகாரத்தை தனக்குச் சாதகமாக இருக்கும் காந்தியத் தலைமையிடம் கொடுத்துவிட்டு வெளியேறுவது நல்லது என உணர்ந்தனர். சுதந்திரத்திற்கு முன் இந்திய பிரதமராக இருந்த ஆங்கிலேய அதிகாரி கிளமெண்ட் அட்லி 1956இல் இந்தியா வந்தபோது, 1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் பின்பு காந்தியின் செல்வாக்கு இந்திய மக்களிடம் குறையத் துவங்கியதால் அவரது போராட்டம் தாங்கள் நாட்டை விட்டு வெளியேறக் காரணமில்லை; ஆனால் ஐஎன்ஏ (இந்திய தேசிய ராணுவம்) வீரர்களைக் கைது செய்ததும் நாட்டில் பம்பாய், விசாகப் பட்டிணம் போன்ற கடற்படைத் தளங்களில் சுமார் 20,000 இந்திய வீரர்கள் ஆங்கிலேய அதிகாரிகளுக்கு எதிராக நடத்திய கிளர்ச்சியும் இந்திய ராணுவத்திலும் இது பரவிய நிலையும், நாடெங்கிலும் இளைஞர்கள் போராட்டமும் தங்கள் அதிகாரம் நீடிப்பத்தை பரிசீலனை செய்ய வைத்தது. நேதாஜியின் பெயரும் செல்வாக்கும் ஊடக இருட்டடிப்பையும் மீறி நாட்டில் பெருகியிருந்தது என்றார். எனவே நாட்டைவிட்டு வெளியேற நேதாஜியே காரணம் என்றார் அவர்.

நேதாஜி, இந்திய தேசத்தை விடுதலைக்குப் பிறகு உலகத்திலேயே மிகவும் முன்னேறக் கூடிய சமூக அரசியல் அமைப்பை நிறுவ வேண்டும் எனக் கனவு கண்டார். "ஆங்கிலேயர்களை இந்த நாட்டைவிட்டு வெளியேற்றுவதுதான் எனது ஒரே கடமை என்று எனது இளமைகாலத்தில் நினைத்தேன். பின்னர் நான் ஆழமாக யோசித்தபிறகு, ஆங்கிலேயர்களை வெளியேற்று வதோடு நமது கடமை முடிவடையாது என்பதை நான் உணர்ந்தேன். இந்தியாவில் புதிய சமூக அமைப்பை உருவாக்குவதற்கு மற்றொரு புரட்சி அவசியமாகும்" என தனது 'எது புரட்சி என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடும் புரட்சி, தனியுடமையை ஒழித்து சமத்துவ சமதர்ம சமுதாயத்தை நிலைநாட்டும் 'சோசலிசப் புரட்சி' என்பதாகும். எனவே அவரது உணர்வினைச் சுமந்து அவரது கனவை நனவாக்க, சுதந்திரத்தின் மூலம் அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு, மக்களைச் சுரண்டிக் கொழுத்து, மக்களை ஓட்டாண்டியாக்கிவரும் இந்திய ஏகபோக முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து, விவசாயி களையும் தொழிலாளிகளையும் ஒடுக்கப்படும் அனைத்து மக்களையும் ஒன்று திரட்டி சோசலிசப் புரட்சியை வெற்றிபெறச் செய்ய வேண்டும். அதற்கு நேதாஜியின் போராட்ட வரலாறை இன்றைய தலைமுறையினரிடம் எடுத்துச் செல்ல நேதாஜியின் 125வது பிறந்த ஆண்டை சிறப்புமிக்க வகையில் அனுசரிப்போமாக ■

## புதுச்சேரி மாநிலத்தில் நிரந்தரப் பேராசிரியர்களை நியமிக்கக் கோரி ஏஐடிஎஸ்ஓ ஆர்ப்பாட்டம்




புதுச்சேரியில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

அகில இந்திய. ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO) நவம்பர் 25 அன்று புதுச்சேரி என்ஆர் காங்கிரஸ், பாஜக கூட்டணி அரசாங்கத்தின் கல்வி விரோதப் போக்கைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புதுச்சேரியில் கல்வியாண்டு முடியும் தருவாயில்கூட மாணவர் சேர்க்கை முடிக்காத சென்டாக் நிர்வாகத்தை கண்டித்தும் புதுச்சேரி அரசு சட்டக் கல்லூரியில் பேராசிரியர் இடங்களை நிரப்ப வேண்டியும், அரசுப் பள்ளி மாணவர்கள் பயணிக்க ஒரு ரூபாய் பேருந்துக் கட்டணத்தை உடனடியாக அமுல்படுத்தக் கோரியும்,கல்விப் பிரச்சினை களுக்காகப் போராடும் தாகூர் கலைக் கல்லூரி முதல்வரை ஆதரித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு முரளிதரன் தலைமை தாங்கினார். போராட்டத்தில் அகில ஜனநாயக மாணவர் சங்க அகில இந்தியத் துணைத் தலைவர் தோழர் வால்டர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) புதுச்சேரி மாநில செயலாளர் தோழர் லெனின் துரை, அனைத்திந்திய மாணவர் பெருமன்ற புதுச்சேரித் தலைவர் வழக்கறிஞர் முரளி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள் ■

# குஜராத் மாநில மோர்பி பால விபத்தும் பிரதமர் மோடியின் இரட்டை பேச்சும்

*மனிதத் தவறே இப் பேரழிவிற்கு காரணம் எனவும் விபத்திற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டியும் உயிரிழந்தோர்க்கும் படுகாயமடைந்தோர்க்கும் உரிய நஷ்டஈடு வழங்கவும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் குஜராத் மாநிலச் செயலாளர் தோழர் மீனாக்ஷி ஜோஷி அவர்கள் கோரிக்கை :*

2016ல் கல்கத்தாவில் ஒரு மேம்பாலம் இடிந்துவிழுந்து 20க்கும் மேற்பட்டோர் இறந்தபோது மேற்கு வங்க மாநில அரசாங்கத்தை ஒரு பொதுக்கூட்டத்தில் கடுமையாக சாடினார் மோடி. "கல்கத்தாவின் மையப் பகுதியில் ஒரு மேம்பாலம் இடிந்து பலர் இறந்தபோது மாநில அரசாங்கம் அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இடது முன்னணி கட்சிகளும் திரிணமூல் காங்கிரசும் ஒன்றையொன்று குறைகூறி வருகின்றன. இப் பாலத்தை கட்டிய நிறுவனம் இது கடவுளின் செயல் என்கிறது. ஆனால், உண்மையில் இது ஒரு மோசடியின் செயலேயாகும்" என்று பிரதமர் மோடி கூறினார்.

இந்த விபத்து மாநில அரசாங்கத்தை அகற்றுவதற்கான கடவுளின் தெளிவான செய்தியாகும் என கூறினார். இந்த விபத்திற்காக மேற்கு வங்க திரிணமூல் அரசாங்கத்தை மோடி





**குஜராத் மோர்பி பால விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி**

குறைகூறினார். கடமையை புறக்கணிக்குமானால், கட்டுமானத்தின் தரத்தில் சமரசம் செய்து கொள்ளுமானால், கட்டுமானத்திற்கான சரியான முறையை மேற்கொள்ள வில்லையானால் எந்தவொரு அரசாங்கமும் அதற்கு பொறுப் பேற்றேயாக வேண்டும் என்பது மிகமிகச் சரியே. ஆனால், 141 உயிர்களைப் பலிவாங்கிய தற்போதைய குஜராத் மோர்பி பால விபத்தின்போதும், தேர்தல் நெருங்கும் அவ்வேளையில் பிரதமர் மோடி அக்டோபர் 30 அன்று அங்குதான் பல்வேறு திட்டங்களை துவக்கிவைக்கும் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருந்தாரேதவிர விபத்து நடைபெற்ற அவ்விடத்திற்கு உடனடியாக மோடி செல்ல வில்லை. இறந்தோரின், காயமுற்றோரின் குடும்பத்தினருக்கு மூட்டை மூட்டையாக அனுதாபங்களை மட்டும் அவர் அங்கு அனுப்பினார்.

பாஜக ஆளும் குஜராத் அரசாங்கத்தின்கீழ் சமீபத்தில்தான் அந்த பாலம் பழுது பார்க்கப்பட்டது. ஆனால் 'கடவுளின் செயல் அல்லது மோசடி என்கிற விமர்சனம் தற்போது அவரால் எழுப்பப்படவில்லை. இதுபோன்ற இரட்டைப் பேச்சுக்களையும் முதலைக்கண்ணீர் வடிப்பதையும் தன் மீது, தன் கட்சியின் அல்லது தனது அரசாங்கத்தின் தவறுகள், குறைகளின் மீது பாராமுகமாகவும் இருப்பதை, ஆனால் அதேசமயம் தன் எதிரிகளை மட்டும் குறை சொல்வதை ஒரு மோசமான சர்வாதிகாரியிடம் மட்டுமே காணமுடியும்.

உலகின் மிகப்பெரிய கடிகாரத் தயாரிப்பு கம்பெனியான ஓரேவா குழுமத்திற்கு ஏன் இப் பாலத்தை பராமரிக்கும் பணி ஒப்படைக்கப் பட்டது என்ற ஒரு பெரிய கேள்வி எழுப்பப் படுகிறது. மாநில பாஜக அரசாங்கம் கீழ் மட்டத்திலுள்ள ஒருசில ஊழியர்களை கைது செய்துள்ளது, ஆனால் முக்கிய குற்றவாளிகள் உல்லாசமாக வெளியே உலா வந்து கொண்டிருக்கின்றனர். இதற்கிடையில், 'எல்லாம் கடவுள் செயல்' என 141 உயிர்கள் அநியாயமாக பலியானது குறித்து எந்தவித மன பதற்றமுமின்றி கூறியிருக்கிறார் ஓரேவா நிறுவனத்தின் மேனேஜர். ' விழுந்தவர்கள் ஆற்றுக்கு அடியில் இருந்த பாறையின் மீது மோதியதால் உயிரிழந்தனர்' என்று தேசியப் பேரிடர் மேலாண்மை படையின் அதிகாரி வெட்கங்கெட்ட வகையில் கூறியிருக்கிறார். நமது கட்சியின் மாநிலச் செயலாளர், "நிர்வாகம் என்ற ஒன்று இருக்கிறதா?" என கடுமையாக சாடியிருக்கிறார். அக்டோபர் 31ம் தேதி முதலமைச்சருக்கு அனுப்பிய மனுவில், "பல்வேறு தகவல்களை வைத்து ஆய்வு செய்யும்போது இவ்விபத்து மனித தவறுகளால் ஏற்பட்ட பேரழிவே என்று முடிவிற்கு வராமலிருக்க முடியவில்லை" என கூறியிருக்கிறார்.

இத்தகைய துயரத்திற்கிடையில் வாக்கு அரசியல் செய்யும் கட்சிகள் ஒருவரையொருவர் குற்றம் சாட்டும் படலத்தில் இறங்கிவிட்டனர். பழுதுபார்ப்புப்பணி நிறைவடைந்து நகராட்சி யிடம் உரிய அனுமதி பெறாமலேயே பாலத்தை பார்வையிட மக்கள் அனுமதிக் கப்பட்டுள்ள நிலையில் நகராட்சி நிர்வாகமும் மாநில அரசாங்கமும் மொத்த பழியையும் அந்த கம்பெனிமீது போட்டு பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றன ■




**நேதாஜி 125வது பிறந்த ஆண்டு விழா**

**சிறப்புரை: Dr அனிதா போஸ், ஜெர்மனி**
**(நேதாஜியின் மகள்)**

**Dr சுமித்ரோ பானர்ஜி, போராசிரியர்**
**கொல்கத்தா, IISER**

**டிசம்பர் 31, 2022 மாலை 3 மணி**

**வலைதள இணைப்பு**
Fb NetajiShubhas125bacc
Youtube Netaji125th birth anniversary committee

**அகில இந்திய நேதாஜி 125வது பிறந்த நூற்றாண்டு விழா கமிட்டி**

# புதுச்சேரி மாநிலம் – குடியிருப்புப் பகுதியில் வரவிருக்கும் மதுபானக் கடையை எதிர்த்துப் போராட்டம் வெற்றி

புதுச்சேரி காமராஜர் தொகுதிக்குட்பட்ட சாமிப்பிள்ளை தோட்டம் பகுதியில் குடியிருப்புக்கு மத்தியில் அமைய உள்ள அயல்நாட்டு மதுபானக் கடையை அனுமதிக்கக் கூடாது என்று கிராம மக்கள் போராட்டக்குழு சார்பாக நவம்பர் 29 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கிராமத் தலைவர் பார்த்திபன், எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் புதுச்சேரி மாநிலச் செயலாளர் தோழர் லெனின் துரை மற்றும் ஜானி தலைமை தாங்கினார்கள். போராட்டத்திற்கு தயாளன் மோகன்தாஸ், கர்ணன், ரகுபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர் ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் முதல்வர் வே.நாராயணசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியலிங்கம், காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவர் வைத்தியநாதன் அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் தோழர் சலீம், பாட்டாளி மக்கள் கட்சி மாநிலச் செயலாளர் கணபதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் துணைச் செயலாளர் தோழர் சேது செல்வம் பொருளாளர் தோழர் சுப்பையா, சோசலிஸ்ட் யூனிடி சென்டர் இந்தியா (கம்யூனிஸ்ட்) கட்சி



**புதுச்சேரியில் மதுபானக் கடையை எதிர்த்து அனைத்துக் கட்சி ஆர்ப்பாட்டம்**

மாநிலக் குழு உறுப்பினர் தோழர் சிவக்குமார், இந்து மக்கள் கட்சி புதுச்சேரி மாநில தலைவர் மஞ்சினி, தமிழர் களம் அழகர், புதுச்சேரி பிரதேச தலித் மக்கள் கூட்டமைப்புத் தலைவர் பிரகாஷ், பெரியார் சிந்தனையாளர் இயக்கத்தின் தலைவர் ராஜாஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

புதுச்சேரி முதலமைச்சர், கலால்துறை செயலாளர் ஆகியோரை போராட்டகுழு சார்பாக சந்தித்து பேசிய பொழுது புதிய மதுபான கடையை அனுமதியை ரத்து செய்துவிட்டதாக முதல்வரும், கலால்துறை செயலாளரும் தெரிவித்தார்கள். இது போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

புரட்சிப் சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# ஈரான் பெண்களின் போராட்டம் வெற்றி

ஈரானில் இஸ்லாமிய மதவெறி அரசாங்கம் சுமார் **20** ஆண்டுகளாக அமுலாக்கி வந்த, பெண்கள் முகத்தை மறைக்கும் கட்டாய ஹிஜாப் ஆடை, ஆடைக் கட்டுப்பாடு, முடி அலங்காரக் கட்டுப்பாடு விதிகளையும் அவற்றை மேற்பார்வையிட்டு எச்சரித்து தண்டனை வழங்கும் அறநெறி கவல்துறையையும் (மாரல் போலிஸ்) எதிர்த்து அந்நாட்டுப் பெண்கள் கடும் போராட்டத்தை இரண்டு மாதங்களுக்கு முன் மேற்கொண்டனர். பல ஆண்டுகளாக பெண்கள் இந்த மதவெறி அடக்குமுறைக்கு எதிராகக் குமுறிக் கொண்டிருந்தனர். செப்டம்பர் **13** அன்று மாஷா அம்னி என்ற இளம் பெண்ணை ஹிஜாப் அணியாத தற்காக கைது செய்து காவல் நிலையத்தில் அடித்து கோமாவில் தள்ளினர். இறுதியாக அவர் செப்டம்பர் **16** அன்று இறந்துவிட்டார். அன்றிலிருந்து ஈரானில் பெண்கள் போராட்டம் வெடித்தெழுந்தது. ஜனநாயக எண்ணம் கொண்ட அந்நாட்டு மக்களும் உலகம் எங்கிலும் இருக்கும் ஜனநாயக சக்திகளும் இந்தியாவில் பல்வேறு இடதுசாரி ஜனநாயக அமைப்புகளும் இப்போராட்டத்தை வலுவாக ஆதரித்தன. அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கம் (AIMSS), அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO), அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (AIDYO) ஆகிய அமைப்புகளும் இந்தியாவின் பல நகரங்களில் ஈரான் போராட்டத்தை ஆதரித்து ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

ஈரான் மக்களும் பெரும்பாலான பெண்களும் போராட்டத்தை தொடர்ந்து தளராமல் உச்சக் கட்டத்திற்கு எடுத்துச் சென்றனர். போராட்டச் சின்னமாக மாஷா அம்னியின் படங்களை ஏந்தி அம்னியின் **40** நினைவு நாளை அனுசரிக்கும் விதமாக இலக்கணக்கான மக்கள் அஞ்சலி ஊர்வலம் நடத்தினர். ஊர்வலத்தில் அவர்கள்மீது பாதுகாப்பு படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இதற்கும் அஞ்சாத அந்நாட்டு மக்களும் உலக முழுதும் பெண்கள் அமைப்புகளும் ஜனநாயக எண்ணம் கொண்ட பொது மக்களும் ஈரான் மதவெறி அரசுக்கு எதிராக ஒருமித்து ஊர்வலங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர். மீண்டும் துப்பாக்கிச் சூடு தொடர்ந்தது.




**போராடும் ஈரானிய மக்களுக்கு ஆதரவாக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்**

நவம்பர் **25**ஐ ஈரான் மக்கள் போராட்ட ஆதரவு ஒற்றுமை நாள் என எமது கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) அறிவித்து நாடெங்கிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. சென்னையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் அன்றைய தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அகில இந்திய மகளிர் கலாச்சார சங்க தமிழ்நாடு பொறுப்பாளர் தோழர் மேரி ஈரான் பெண்களுக்கு ஃபாசிச மதவெறி அரசால் நடத்தப்படும் கொடுமைகளையும் அதற்கெதிராக பெண்கள் துணிச்சலுடன் போராட்டத்தில் ஈடுபடுவதையும் விவரித்தார். ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி உரையாற்றினார். அவரது உரையில், பிற்போக்கு, பழமைவாத, மதவெறி நடவடிக்கைகள் ஈரானில் மட்டுமல்ல, உலகின் அனைத்து முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளிலும் நடக்கின்றன. அதற்குக் காரணம், முதலாளித்துவம் முற்போக்கு ஜனநாயக கருத்துக்களையும் மரபுகளையும் கலாச்சாரத்தையும் இழந்து மரணப்படுக்கையில் அழுகி நாற்ற மெடுத்துக் கொண்டிருப்பதால் ஆகும். உழைக்கும் மக்கள் தத்தமது நாடுகளின் பிற்போக்கு முதலாளித்துவ அரசுகளை சோசலிசத்தால் இடமாற்றம் செய்யாமல் இவற்றிற்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாது என்றார். இறுதியாக, நவம்பர் **30** அன்று மூன்றுநாள் பொது வேலை நிறுத்தத்திற்கு ஈரான் மக்கள் அறைகூவல் விடுத்தனர். போராட்டம் ஒட்டு மொத்த அரசிற்கே ஆபத்தாவதை உணர்ந்த ஈரான் ஆட்சியாளர்கள், அறநெறி காவல் அமைப்பை டிசம்பர் **4** அன்று கைவிடுவதாக அறிவித்தனர் ■

# எஸ்கேஎம் அறைகூவலுக்கு இணங்க விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு முழுவதும் பேரணி

மூன்று வேளாண் சட்டங்களை ரத்து செய்தல், குறைந்தபட்ச ஆதாரவிலை, கடனிலிருந்து விடுதலை, மின்சாரச் சட்ட திருத்த மசோதாவைத் திரும்பப் பெறுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டில்லியின் எல்லைப்பகுதிகளில் **2020**, நவம்பர் **26** அன்று துவங்கி பல்வேறு அடக்குமுறைகளை, பாதக இயற்கைச் சூழல்களை எதிர்கொண்டு, **700**க்கும் மேற்பட்ட இன்னுயிர்களை பலிகொடுத்து ஓராண்டுக்கும் மேலாக நீடித்த விவசாயிகளின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீரமிகு போராட்டமானது மத்திய பாஜக அரசாங்கம் விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதியின் பேரில் வாபஸ் பெறப்பட்டது. ஆனால் **10** மாதங்களாகியும் அது எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. இது இந்திய நாட்டு விவசாயிகள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. கொடுத்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி ஒரு கோரிக்கை மனுவை இந்தியாவின் அனைத்து மாநில ஆளுனர்களுக்கும் கொடுக்க வேண்டும் என அகில இந்திய ஐக்கிய விவசாயிகள் (எஸ்கேஎம்) முன்னணி அறைகூவல் விடுத்ததன்பேரில் தமிழகத்தில் **2022**, நவம்பர் **26** அன்று பல்லாயிரக்கணக்கில் விவசாயிகளைத் திரட்டி பேரணியாகச் சென்று ஆளுநரிடம் மனு சமர்ப்பிக்க முடிவு செய்யப்பட்டது. சென்னையில் நடைபெற்ற பேரணியின்போது தமிழ்நாடு முழுவதிலுமிருந்து விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் திரண்டுவந்து மத்திய அரசாங்கத்துக்கு எதிராகக் கோஷமிட்டனர். பேரணியைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அனைத்து விவசாயிகள் அமைப்புகளின் தலைவர்களும் கண்டன உரையாற்றினர். கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டத்தைத் தொடர்வது எனும் உறுதியுடன் திரும்பிச் சென்றனர். இந்த நிகழ்ச்சியில் ஏஐகேகேஎம்எஸ் தொண்டர்களும் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர் ■




**நாடு முழுவதும் ஆளுனர்களுக்கு மனு அளிக்கும் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக சென்னையில் 26.11.2022 அன்று விவசாயிகள் நடத்திய பேரணி**

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**